# நீங்கள் கேள்விகளைக் கொண்டிருக்கும்போது

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #26*

VI. *மூன்றாவது பஸ்காவிலிருந்து இயேசு பெத்தானிக்கு வந்து சேர்ந்தது வரை (தொடர்ச்சி).*

S. *எருசலேமுக்குக் கடைசிப் பயணம் (லூக். 17:11அ) (தொடர்ச்சி).*

4. *திருமணமுறவு பற்றிய கேள்விகள் - மற்றும் திருமணம் பற்றிய போதனை (மத். 19:3-12; மாற். 10:2-12).*
5. *பிள்ளைகள் பற்றிய தவறான புரிந்து கொள்ளுதல் - மற்றும் பிள்ளையைப் போலிருத்தல் பற்றிய போதனை (மத். 19:13-15; மாற். 10:13-16; லூக். 18:15-17).*
6. *நித்திய ஜீவனைப் பற்றிய ஒரு கேள்வி - மற்றும் செல்வங்கள்மீதான போதனை (செல்வந்தனான இளம் அதிகாரியைப் பற்றிய கதை) (மத். 19:16-26; மாற். 10:17-27; லூக். 18:18-27).*
7. *பலன்கள் பற்றிய கேள்வி - மற்றும் தேவனுடைய ஆசீர்வாதங்கள் பற்றிய போதனை (மத். 19:27-30; மாற். 10:28-31; லூக். 18:28-30), திராட்ச தோட்டத்தில் வேலையாட்களைப் பற்றிய உவமையும் அடங்கும் (மத். 20:1-16).*

### அறிமுகம்

வேதாகம வகுப்பில் சிலர் கேள்விகள் கேட்கத் தயங்குகின்றார்கள். ஒருவேளை, அவர்கள் வகுப்பைத் தாங்கள் சீர்குலைத்து விடுவோமோ என்று நினைக்கலாம். ஒருவேளை, மற்றவர்கள் தங்களை அறியாமையும் தகவல் தெரியாதவர்களுமாய் இருப்பதாக நினைத்து விடுவார்களோ என்று பயந்திருக்கலாம். காரணம் எதுவாக இருந்தாலும், அவர்களின் கேள்விகள் கேட்கப்படாதவையாகவும் - பதில் அளிக்கப்படாதவையாகவும் - எஞ்சியிருக்கின்றன. இருப்பினும், திறமை வாய்ந்த போதகர்கள் கேள்விகளை வரவேற்கின்றனர். இவர்கள், கற்றலின் செயல்முறையில் கேள்விகள் அத்தியாவசியமான பகுதியாக இருக்கின்றன என்பதை உணர்ந்து அறிந்துள்ளனர். கேள்வியானது, அதைக் கேட்பவர் சிந்திக்கின்றார்

என்பதைக் காண்பிக்கின்றது. நேர்மையான கேள்வியானது, அதைக் கேட்பவர் கற்கத் தயாராக இருக்கின்றார் என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது.

நமது முந்திய பாடத்தில், இயேசு எருசலேமுக்குத் தமது கடைசிப் பயணத்தைத் தொடங்கியிருந்தார், அதில் பஸ்காவுக்குச் செல்லும் வழியில் இருந்த திருப்பயணிகள் அவரைச் சூழ்ந்த நிலையில், அவர் யோர்தான் நதியின் கிழக்குக் கரையோரமாக நடைப்பயணம் மேற்கொண்டிருந்தார். அவர் பயணம் செய்து கொண்டிருக்கையில், தொடர்ந்து போதித்துக் கொண்டிருந்தார் (மாற். 10:1). மேலும் அவர் தமது விரோதிகளால் (மத். 19:3, 7), தமது சீஷர்களால் (மத். 19:25, 27; மாற். 10:10), மற்றும் பிறரால் (மத். 19:16, 20) தொடர்ந்து கேள்விகள் கேட்கப்பட்டுக் கொண்டிருந்தார். கிறிஸ்துவின் சிந்தையானது சிலுவையை மையங்கொண்டதாக இருந்தாலும் (லூக். 12:50; மத். 20:17-19), அவர் கேள்விகளை ஊக்கம் குன்றச் செய்யாதிருந்தார். எந்தக் கேள்வியும் பதில் அளிக்கப்படாமல் விட்டுவிடப் படாதிருந்தது. எந்தக் கேள்விக்கும் [அதைக் கேட்டவர்], “போதகர் என்னைக் கண்டுகொள்ளவில்லை; அவர் அக்கறை கொள்ளவில்லை” என்று கூற முடியாதிருந்தது.

இந்தப் பாடத்தில், விதிவசமான அந்தப் பயணத்தின்போது கேட்கப் பட்ட கேள்விகளில் சில உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒருவேளை, இயேசு வின் பதில்கள் நீங்கள் கொண்டுள்ள கேள்விகளுக்குப் பதில் தருவதற்கு உதவும். குறைந்தபட்சம் நீங்கள், கேள்விகளைக் கொண்டிருப்பதில் தவறு எதுவும் இல்லை - மற்றும் நீங்கள் பதில்களைக் கண்டறிவதற்குக் கர்த்தர் உங்களுக்கு உதவுவார் - என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

## திருமண முறிவைப் பற்றிய விஷயம் என்ன? (மத். 19:3-12; மாற். 10:2-12)[1]

**பரிசேயர்கள் கேட்டனர் (மத். 19:3; மாற். 10:2)**

பிடிவாதமாக எதிர்த்து நின்ற பரிசேயர்கள், கிறிஸ்துவுடன் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். சற்று நேரத்திற்கு முன்புதான் அவர்கள், “தேவனுடைய ராஜ்யம் எப்போது வரும்?” என்று அவரிடம் கேட்டிருந் தார்கள் (லூக். 17:20).[2] இப்போது அவர்கள் இன்னொரு கேள்வியைக் கொண்டு அவரை இடைமறித்தனர். “அப்பொழுது, பரிசேயர் அவரைச் சோதிக்கவேண்டுமென்று அவரிடத்தில் வந்து: ‘புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா?’ என்று கேட்டார்கள்” (மத். 19:3). பெரும்பாலான கேள்விகள் பதிலை நாடியே மக்களால் கேட்கப்படுகின்றன, ஆனால் சில வேளைகளில் ஒரு கேள்வியானது உள்நோக்கத்துடன் கேட்கப்படுகிறது. இந்தக் கேள்வி யானது ஒரு வலையாக இருக்கும்படியான நோக்கங்கொண்டு கேட்கப் பட்டது - இந்த வலையானது பல திசைகளிலும் இருந்து மூடும்படி பாயக் கூடியதாக இருந்தது.

ஒரு மனிதன் தனது மனைவியிடத்தில் “இலச்சையான காரியத்தைக்”

கண்டு, அவள்மேல் பிரியமற்றவனானால், அவன் “தள்ளுதலின் சீட்டை”[3] எழுதி, அவள் கையில் கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பி விடலாம் என்று மோசே எழுதியிருந்தார் (உபா. 24:1). “இலச்சையான காரியம்” என்பது எதை அர்த்தப்படுத்தியது என்பதைப் பற்றி நியாயப் பிரமாணத்தில் வல்லுநர்கள் பிரிவுபட்டிருந்தனர். இதைப் பற்றி அடிப்படையில் இரு வகையான கொள்கைகள் கொண்ட பள்ளிகள் நிலவின: அவை ஹில்லல் மற்றும் ஷம்மாய் என்பவர்களின் கொள்கைகள் கொண்ட பள்ளிகளாகும். ஹில்லல் என்பவரின் கொள்கைகள் கொண்ட பள்ளியானது, ஒரு மனிதன் அற்பமான எந்தக் குற்றத்திற்காகவும் தனது மனைவியைத் தள்ளிவைத்து விட மோசேயின் வார்த்தைகள் அனுமதித்தன என்ற கருத்தைக் கொண்டிருந்தது: எடுத்துக்காட்டாக, அவள் அப்பத்தைக் கருகவைத்துவிட்டால் அல்லது அவன் மிக அழகான அல்லது இளமையான இன்னொரு பெண்ணைக் கண்டறிந்தால், தனது மனைவியைத் தள்ளி வைத்து விடலாம் என்று கூறியது. ஷம்மாய் என்பவரின் சிந்தனையானது, பாலியல் ஒழுக்கக் கேட்டிற்காக மட்டுமே திருமண முறிவு அனுமதிக்கப் பட்டது என்று கருத்துக் கொண்டிருந்தது. இந்த நிலைப்பாடுகளில் ஏதாவது ஒன்றைக் கிறிஸ்து கொண்டிருப்பார் என்றும், அதன்மூலம் எதிர்த்தரப்புக் கருத்து யாவற்றுக்கும் அவர் புறம்பாக இருப்பார் என்றும் பரிசேயர்கள் யூகம் செய்தனர்.

மேலும், முன்பே இயேசு, திருமண முறிவுக்கு எதிராகப் போதித்திருந்தார் (மத். 5:31, 32). அவர் மோசேயுடன் ஒத்துப் போவாதிருந்தார் என்று பரிசேயர்களால் நிலைநாட்ட முடிந்ததென்றால், அவர்கள் அவரை மக்களின் கண்களுக்கு முன்பாக மதிப்புக் குலையச் செய்ய முடியும். கிறிஸ்து எவ்விதமான பதிலை அளித்தாலும், அவர் தம்மைத் தாமே குற்றப் படுத்துவார் என்று அவர்கள் ஆய்ந்தறிந்தனர். இது பேரழிவு பொதியப் பட்ட ஒரு சூழ்நிலையாக இருந்தது.[4]

### இயேசு பதில் அளித்தார் (மத். 19:3-6; மாற். 10:6-9[5])

நான் போதிக்கையில் கேள்விக்குப் பதில் அளிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன் - ஆனால் திருமண முறிவு பற்றிய கேள்விகள் எனது பிரியமான கேள்விகளின் பட்டியலில் இருப்பதில்லை. ஒரு வகுப்பில், முதல் கேள்வியானது அந்தத் தலைப்பில் கேட்கப்பட்டால் நான், “தொடங்குவதற்கு மிகவும் சுலபமான ஒன்றை எனக்குக் கொடுங்கள்” என்று அலறிவிடுவேன். இருப்பினும் இயேசு, பதில் அளிக்க தயங்காதிருந்தார். அவர் அப்போதிருந்த சிந்தனைப் பள்ளிகள் எதன் சார்பாகவும் ஒதுங்க மறுத்து, அவர்களின் வலைக்குத் தப்பினார். அதற்குப் பதிலாக, அவர் ஆதியாகமம் 1 மற்றும் 2ல் வரைக்குறிப்பிடப்பட்ட வகையிலான, திருமணம் குறித்துத் தொடக்க காலத்தில் இருந்த தேவனுடைய திட்டத்திற்குத் திரும்பிச் சென்றார்:

> அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: “ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக[6] உண்டாக்கினார்

என்பதையும், 'இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்'[7] என்று அவர் சொன்னதை யும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியால் அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்'' என்றார் (மத். 19:4-6).[8]

உபாகமம் 24ல் மோசே எழுதியிருந்தது பற்றிப் பரிசேயர்கள் கேட்டிருந்தனர். இந்தப் பாடக்கருத்துப் பற்றி மோசே அதற்கு முன்பே எழுதியிருந்ததைக் கிறிஸ்து அவர்களுக்கு நினைவூட்டினார். இவ்விதமாக அவர், தமக்கும் அந்த மாபெரும் தலைவருக்கும் இடையில் கருத்து வேற்றுமை எதுவும் இல்லை என்று காண்பித்தார்.

**பரிசேயர்கள் கேட்டனர் (மத். 19:7)**

ஏமாற்றம் அடைந்த பரிசேயர்கள், ''அப்படியானால், தள்ளுதற் சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளி விடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார்?" என்று கேட்டனர் (மத். 19:7). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "திருமணம் நிலைப்புத் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும் என்று தேவன் நோக்கங்கொண்டிருந்தாரென்றால், உபாகமம் 24:1-4ஐ மோசே ஏன் எழுதினார்?" என்று கேட்டனர்.[9]

**இயேசு பதில் அளித்தார் (மத். 19:8, 9)**

இயேசு, ''உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதய கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை" என்று பதில் அளித்தார் (மத். 19:8) திருமண முறிவை மோசே கட்டளையிட்டு இருந்தார் என்று பரிசேயர்கள் கூறினார்கள் (வ. 7), ஆனால் மோசே அதற்கு இடங்கொடுத்திருந்தார் என்று கிறிஸ்து கூறினார் (வ. 8) - இது ஒரு பிரதானமான வேறுபாடாகும்.

வேதாகமத்தின் ''தொடக்கம் முதலாகவே,'' திருமணம் என்பது நிலைப்புத் தன்மை உடையதாக இருக்க வேண்டும் என்று தேவன் நோக்கங் கொண்டிருந்தது தெளிவாக இருந்தது (வ. 8; ஆதி. 2:24). பழைய ஏற்பாட்டின் முடிவில் தேவன், "தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன்'' என்று கூறினார் (மல். 2:16). விஷயம் அதுவாக இருக்குமென்றால், திருமண முறிவு என்பது ஏன் அனுமதிக்கப்பட்டது? அது அவர்களின் "இருதயக் கடினத்தினிமித்தமாக'' அனுமதிக்கப்பட்டது என்று இயேசு கூறினார். பக்குவம் இல்லாத சிறுபிள்ளைகளுக்கு, வயது வந்த காலத்தில் சகித்துக் கொள்ளப்படாத சில விஷயங்கள் அவ்வப்போது அனுமதிக்கப்படுவது உண்டு. அதுபோலவே, இஸ்ரவேல் மக்களுடன் தொடக்க காலத்தில் தேவன் கொண்டிருந்த செயல் வழிமுறைகளில், அவர் உண்மையில் அங்கீகரித்திராத ஒன்றை அனுமதித்திருந்தார்.[10] நாம் அப். 17:30ஐ நினைக்கின்றோம்: "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார், இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள

மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்."[11]

கிறிஸ்து, திருமணம் மற்றும் திருமண முறிவு பற்றிய தமது முந்திய போதனையைத் (மத். 5:31, 32) திரும்பப் பெறும்படி அவரைத் தாங்கள் நிர்ப்பந்திக்க முடியும் என்று பரிசேயர்கள் நினைத்திருந்தால், அவர்கள் தவறானவர்களாய் இருந்தனர். அவர், தாம் முன்பு கூறியதையே ஒரு விதிவிலக்கையும் சேர்த்துத் திரும்பவும் கூறினார்: "எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ்செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபசாரஞ் செய்கிறவனா யிருப்பான்" (மத். 19:9அ).[12]

மீண்டும் ஒருமுறை பரிசேயர்கள் இயேசுவை வலையில் அகப்படுத்து வதில் தோல்வியடைந்தனர். அவர்கள் மீண்டுமாகச் சிவந்த முகங்களுடன் விடப்பட்டிருந்தனர் என்பதில் சந்தேகம் இல்லை.

**சீஷர்கள் கேட்டனர்; இயேசு பதில் அளித்தார்; சீஷர்கள் கேட்டனர் (மாற். 10:10-12; மத். 19:10)**

பிற்பாடு, கிறிஸ்து தமது சீஷர்களுடன் தனித்திருந்தபோது,[13] அவர்கள் இந்தப் பாடக்கருத்துப்பற்றி கேள்விகளைக் கேட்கத் தொடர்ந்தனர் (மாற். 10:10). ஒரு மனிதன் தனது மனைவியைத் தள்ளிவிடுதல் பற்றி இயேசு தாம் முன்பு கூறியிருந்தவற்றையே திரும்பவும் கூறினார் (மாற். 10:11). பின்பு அவர் ஒரு பெண் தனது கணவனைத் தள்ளிவிடுதல் பற்றிய தமது சிந்தனை களை விரித்துரைத்தார்: "மனைவியும் தன் புருஷனைத் தள்ளிவிட்டு, வேறொருவனை விவாகம்பண்ணினால், விபசாரஞ்செய்கிறவளாயிருப் பாள்" (மாற். 10:12). யூதர்களின் மத்தியில், திருமண முறிவு என்பது ஒரு மனிதனின் ஆணின் பாத்தியதையாக/உரிமையாக இருந்தது, ஆனால் குறிப்பிட்ட சில சூழ்நிலைகளின் கீழ், ஒரு பெண் தனக்கு தள்ளுதற் சீட்டைக் கொடுக்கும்படி தனது கணவனை நிர்ப்பந்தித்து, நீதிமன்றத்திற்குச் செல்ல முடிந்திருந்தது.[14] புறஜாதியாரின் மத்தியில், பெண்களினால் தொடங்கப்பட்ட திருமண முறிவு என்பது அதிகம் சாதாரணமானதாக இருந்தது (1 கொரி. 7:13ஐக் காணவும்).[15]

இன்றைய நாட்களில் மக்கள், திருமணத்தின் நிலைப்புத் தன்மை மீதான கிறிஸ்துவின் போதனை எவ்வளவு செயல்வலிவுள்ளதாக இருக்கிறது என்பதைக் காணத் தவறுகின்றனர், ஆனால் அந்தக் கருத்தானது சீஷர்களின் சிந்தையிலிருந்து தப்பவில்லை. அவர்கள், "மனைவியைப்பற்றிப் புருஷனு டைய காரியம் இப்படியிருந்தால், விவாகம் பண்ணுகிறது நல்லதல்ல" என்று கூறினார்கள் (மத். 19:10). வேறுவார்த்தைகளில் சொல்லுவதென்றால், "மகிழ்வற்ற திருமணம் ஒன்றில் அகப்படும் வாய்ப்பை மேற்கொள்ளுவதைக் காட்டிலும் திருமணம் செய்யாதிருப்பது மேன்மையானது" என்று அவர்கள் கூறினர். வேதாகமத்தைக் கற்றறியாதவர்களும், உலக சிந்தை கொண்டவர் களும், ஒரு ஆணும் பெண்ணும் வாழ்நாள் முழுவதற்குமான திருமண உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதைக் காட்டிலும் வேசித்தனத்தில் ஒன்றாக வாழ்தல் என்பது மேன்மையானது என்று இன்னமும் வாதிடுகின்றனர்.[16]

***இயேசு பதில் அளித்தார் (மத். 19:11, 12)***

*இயேசு, "வரம்பெற்றவர்களே தவிர மற்றவர்கள் இந்த வசனத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்" என்று பதில் அளித்தார் (வ. 11). "விவாகம் பண்ணாமல் இருக்கிறதே நல்லது" என்று சீஷர்களின் உறுதிக்கூற்றே "இந்தக் கூற்றிற்கு முன்னிகழ்ச்சியாக" உள்ளது. "மற்றவர்கள்" அந்த வசனத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று கிறிஸ்து கூறியபோது, ஒவ்வொரு வரும் திருமணமாகாத நிலையில் வாழமுடியாது என்பதை அவர் ஒப்புக் கொண்டார். முதலில் அவர், திருமணமாகாத நிலையில் வாழும்படிக்கு இயற்கையினால் நிர்ப்பந்திக்கப்பட்டவர்களைப்பற்றி (பாலியல் உறவு கொள்ள இயலாத நிலையில் பிறந்தவர்களைப் பற்றி; வ. 12அ)க் குறிப் பிட்டார், பின்பு, திருமணமாகாத நிலையில் வாழும்படி மனிதர்களினால் நிர்ப்பந்திக்கப்பட்டவர்களைப் பற்றி(மலடாக்கப்பட்ட மனிதர்கள்[17]; வ. 12ஆ)க் குறிப்பிட்டார்.*

*கடைசியில் அவர், "பரலோக ராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர் களாக்கிக் கொண்டவர்களை"க் குறித்துப் பேசினார் (வ. 12இ). இது தங்கள் உடல் உறுப்புக்களைச் சிதைக்க அனுமதிக்கும் தனிநபர்களைக் குறிப்பிடுவ தில்லை; உடலானது தேவனுடைய "ஆலயம்" என்ற வகையில் மதிக்கப்பட வேண்டும் (1 கொரி. 6:19; ரோமர் 12:1ஐக் காணவும்). மாறாக இவ்விடத்தில் குறிப்பானது, தங்கள் நேரம் முழுவதையும் தேவனுக்கும் மனிதருக்குமான ஊழியத்தில் ஒப்புக்கொடுப்பதற்கென்று திருமணமாகாத வாழ்வை வேண்டுமென்றே தேர்ந்துகொண்டவர்களைப் பற்றியதாக இருந்தது (1 கொரி. 7:32-34ஐக் காணவும்).[18] இயேசு, "இதை ஏற்றுக்கொள்ள வல்லவன் ஏற்றுக்கொள்ளக் கடவன்" என்று கூறினார் (மத். 19:12ஈ). வெளிப்படை யாகக் கூறுவதென்றால், நம்மில் பெரும்பாலானவர்களுக்கு சோதனைக்கு அடிபணியாமல், திருமணமாகாத வாழ்வு வாழுதல் என்பது "வரமளிக்கப்" பட்டிருப்பதில்லை (வ. 11); ஒரு துணையை[மனைவியை/கணவரை]க் கொண்டிருத்தல் நல்லதாகவே உள்ளது (1 கொரி. 7:2, 7ஐக் காணவும்).*

*கிறிஸ்து தமது சீஷர்களுக்கு அளித்த பதிலை நாம் பின்வருமாறு தொகுத்துரைக்கலாம்: "திருமணம் செய்து கொள்ளுதல் நல்லதாகவே உள்ளது. ஆனால் திருமணம் செய்து கொள்ளுபவர்கள், அது வாழ்வு முழுவதற்குமானது என்பதை முதலில் புரிந்துகொள்ளட்டும்!"*

## *பிள்ளைகளைப்பற்றிய விஷயம் என்ன? (மத். 19:13-15; மாற். 10:13-16; லூக். 18:15-17)[19]*

***பிள்ளைகள் முக்கியமானவர்களாக இருக்கின்றனர்***

*இயேசு ஒரு இடத்தில் ஓய்வெடுத்தபோது, தாய்மார்கள் தங்கள் பிள்ளைகள் அவரால் ஆசீர்வதிக்கப்படுவதற்காக அவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை மதத் தலைவர்களிடத்தில் கொண்டுவருதல் என்பது வழக்கத்திற்கு மாறானதாக இருந்ததில்லை.[20]*

*அந்தப் பெண்களைக் கிறிஸ்துவின் சீஷர்கள் கடிந்துகொண்டனர். ஒருவேளை, அந்தத் தாய்மார்கள் தன்முனைப்புடன் இருந்ததாக அவர்கள் நினைத்திருக்கலாம். ஒருவேளை, இயேசு தமது நேரத்தைப் பிள்ளைகளுக் காகச் செலவிடுவதைப் பார்க்கிலும் "செய்வதற்கு அதிக முக்கியத்துவமான செயல்கள்" கொண்டிருந்ததாக அவர்கள் யூகித்து, இயேசுவைப் பாதுகாக்க நினைத்திருக்கலாம். இயேசு கடிந்துகொண்டவர்களைக் கடிந்து கொண்டார்: ''சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங் கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" (மத். 19:14).*

*பிள்ளைகளுக்காகக் கிறிஸ்து ஜெபம் செய்த காட்சியானது பெற்றோர் ஒவ்வொருவருடைய இருதயத்தையும் தொடுகின்ற காட்சியாக உள்ளது: "அவர்களை அணைத்துக்கொண்டு,[21] அவர்கள்மேல் கைகளை வைத்து[22], அவர்களை ஆசீர்வதித்தார்" (மாற். 10:16).* H. I. *ஹெஸ்டர் அவர்கள், "... பிள்ளைகளிடத்தில் நாம் செலுத்த வேண்டிய அக்கறை மற்றும் நிலைப்பாடு ஆகியவற்றை அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கவில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். சொல்லப்போனால், இன்றைய நாட்களில் பிள்ளைப் பருவத்தினருக்குச் செலுத்தப்பட வேண்டிய மாபெரும் கவனிப்பு மற்றும் மதிப்பு ஆகியவை இயேசு கிறிஸ்துவின் போதனைகளுடன் நேரடியான குறிப்புடையதாக உள்ளது."[23] இராபர்ட் கல்வெர் அவர்கள் பின்வருமாறு உடன்பட்டார்: "மனிதர்களின் பராமரிப்பு மற்றும் பிரியம் ஆகியவற்றில் பிள்ளைகள் தங்களுக்கு உரிமையான இடத்தை, இயேசு அது பற்றி போதிப்பதற்கு முன்பு வரையிலும் ஒருக்காலும் பெற்றிருந்தது இல்லை."[24]*

**பிள்ளையைப் போலிருத்தல் என்பது கட்டளையாக உள்ளது**

*பிள்ளைகளைப் போலிருக்க வேண்டியதின் (யூகித்தலின்றி, நம்புதலு டன் மற்றும் போதிக்கப்படக் கூடியதான தன்மையுடன் இருத்தலின்) அவசியத்தைப்பற்றிப் போதிப்பதற்கு மீண்டுமாக இந்த வேளையை, கிறிஸ்து பயன்படுத்தினார். "எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல் தேவனு டைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மாற். 10:15).*

*ஒருவேளை நாம், பிள்ளைகளை இயேசு ஆசீர்வதித்ததின் நிகழ்ச்சி யானது குழந்தைகளுக்கு "ஞானஸ்நானம்" கொடுத்தல் என்று அழைக்கப் படும் நிகழ்ச்சியை நியாயப்படுத்துவதில்லை என்று சுட்டிக்காண்பிக்க வேண்டியிருக்கலாம். இதற்கு நேர் எதிர்மாறாக, அவ்வேளையில் கிறிஸ்து வின் வார்த்தைகளானது, பிள்ளைகள் தூய்மையாகவும் பரிசுத்தமாகவும் பிறப்பதாக மறைமுகமாய் உணர்த்துகிறது. அவர்களைப் பரலோகத்திற்குத் தயார் செய்வதற்கு மனிதரால் கண்டமைக்கப்பட்ட சடங்குகள் எதுவும் தேவையில்லை.*

# *செல்வங்களைப் பற்றிய விஷயம் என்ன?*
# *(மத். 19:16-26; மாற். 10:17-27; லூக். 18:18-27)*

***செல்வந்தரான ஒரு மனிதருக்கு அறைகூவல் (மத். 19:16-22; மாற். 10:17-22; லூக். 18:18-23)***

இயேசு பிள்ளைகளுக்காக ஜெபித்த பின்பு, அவர் எருசலேமுக்குத் தமது பயணத்தை மீண்டும் தொடர்ந்தார் (மத். 19:15). மீண்டுமாக - இவ்வேளையில் மிக அவசரமான கேள்வியொன்றைக் கொண்டிருந்த ஒரு இளைஞரால் - அவர் நிறுத்தப்பட்டார் (மாற். 10:17). இந்த மனிதர் பொதுவாக, "செல்வந்தரும் இளைஞருமான அதிகாரி" என்று அழைக்கப்படுகின்றார். எந்த ஒரு வசனப்பகுதியும் இவரை இவ்வாறு குறிப்பிடுவதில்லை; ஆனால் லூக்கா 18:18 வசனமானது, இவர் ஒரு தலைவராயிருந்தார் என்று நமக்குக் கூறுகிறது,[25] மத்தேயு 19:20, 22 வசனங்கள், இவர் ஒரு இளைஞராக இருந்தார் என்று நமக்குத் தகவல் தருகின்றன, மற்றும் ஒப்பீட்டு சுவிசேஷ விவரங்கள் யாவும், இவர் ஒரு செல்வந்தராக இருந்தார் என்று சுட்டிக் காண்பிக்கின்றன (லூக். 18:23; மத். 19:22; மாற். 10:22 ஆகியவற்றைக் காணவும்).

செல்வந்தரும் இளைஞருமான இந்த அதிகாரி இயேசுவிடத்தில் ஓடிவந்து, "அவருக்குமுன்பாக முழங்கால்படியிட்டு: 'நல்ல போதகரே, நித்தியஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டான்" (மாற். 10:17).[26] கிறிஸ்து முதலில், "நல்ல" என்ற வார்த்தைக்குப் பதில் அளித்தார்: "நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே" (மாற். 10:18). இங்கு, சிலர் உரிமைகோருவது போல், இயேசு தாம் தேவன் என்பதை மறுத்துரைக்கவில்லை. மாறாக, இந்த இளைஞன் "நல்ல" என்ற வார்த்தையின் முழுமையான மறைகருத்தைப் புரிந்துகொள்ளும்படி அவர் முயற்சி செய்தார். கிறிஸ்து "நல்லவர்" என்பதை இந்த இளைஞன் புரிந்து கொண்டாலே, அவரே மாம்சத்தில் வந்த தேவன் என்பதையும் இவர் அறிவார் (யோவா. 1:1, 14; மத். 1:23). இதை இன்னொரு வழியில் கூறுவதென்றால், இந்த மனிதனினுக்குள் விசுவாசத்தை - இயேசு விரைவில் தரவிருந்த அறைகூவலைச் சந்திக்கத் தேவையான விசுவாசத்தை - நிலைநிறுத்த இயேசு முயற்சி செய்தார்.

பின்பு கிறிஸ்து, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளுதல் பற்றிய கேள்விக்குப் பதில் அளித்தார். அவர் இந்த இளைஞனுக்கு, அந்தக் காலம் வரையிலும் அமலில் இருந்த மோசேயின் பிரமாணத்தைச் சுட்டிக் காண்பித்தார்.[27] குறிப்பாக, பத்துக் கட்டளைகளில் ஐந்தை அவர் குறிப்பிட்டார்: " 'விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக' என்கிற கற்பனைகளை நீ அறிந்திருக்கிறாயே என்றார்" (லூக். 18:20; யாத். 20:12-16; உபா. 5:16-20ஐக் காணவும்).[28] வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால் அவர்,

“நீ நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ள விரும்பினால், தேவன் கூறுபவற்றைச் செய்வாயாக” என்றே கூறினார். இந்த அதிகாரி அதற்கு மறுமொழியாக, “போதகரே, இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன்”; “இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன?” என்றான் (மாற். 10:20; மத். 19:20ஆ).

மனிதரின் உள்ளத்தில் இருப்பதைக் காணக்கூடியவரான கிறிஸ்து, [இந்த இளைஞரிடத்தில்] நன்மைக்கான மற்றும் சரியானவற்றைச் செய்வதற்கான மாபெரும் சாத்தியக்கூறு இருந்ததைக் கண்டார். மாற்கு, “இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து” என்று குறிப்பிட்டார் (மாற். 10:21அ). இவர் ஒரு விசேஷித்த இளைஞராக இருந்தார். ஆகவே கர்த்தர் இவரிடம், “உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு;[29] நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக்கொடு; அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்[30]; பின்பு ... என்னைப் பின்பற்றி வா”[31] என்று கூறினார் (மாற். 10:21ஆ).

“உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு” என்ற கட்டளையானது சீஷத்துவத்திற்கான உலகளாவிய கட்டளையாக இருப்பதில்லை என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது.[32] விஷயம் இதுவாக இருக்குமென்றால், இயேசு இந்த அறிவுரைகளை இந்த இளம் அதிகாரிக்குக் கொடுத்தது ஏன்? குறைந்தது இரண்டு சாத்தியக்கூறுகள் உள்ளன:

(1) கிறிஸ்து இந்த மனிதனின் இருதயத்தினுள் கண்ணோக்கியபோது, பொருளாசை என்பதே இவரது அடிப்படையான பிரச்சனையாக இருந்தது என்று கண்டார். பத்துக் கட்டளைகளில் *ஐந்து* கட்டளைகளை இயேசு மேற்கோள் காண்பித்தார் என்று முன்பே நான் குறிப்பிட்டேன் - ஆனால் அந்தக் கட்டளைகளில் *ஆறு* கட்டளைகள் ஒரு அலகாக (ஒருவர் தமது சகமனிதரை எவ்வாறு நடத்த வேண்டும் என்று தொகுத்துரைப்பதாக)க் கருதப்பட்டுள்ளன. இந்த ஆறு கட்டளைகளில் இயேசு மேற்கோள் காண்பிக்காத கட்டளை எது? பத்தாவது எண் கொண்ட கட்டளையே: ‘‘இச்சியாதிருப்பாயாக’’ (யாத். 20:17; உபா. 5:21).[33] அந்த விட்டு விடுதலானது வேண்டுமென்றே செய்யப்பட்டதாகக் காணப்படுகிறது; இந்த அதிகாரிக்கும் நித்திய ஜீவனுக்கும் இடையில் பொருளாசை நின்றிருந்தது என்பது உறுதி. ஒரு சீஷன் எப்படியிருக்க வேண்டுமோ, அப்படியிருப்பதற்குத் தடையாக உள்ள எந்த ஒரு விஷயத்தையும் விட்டு அந்த சீஷன் விலகியிருக்க வேண்டும் என்று கிறிஸ்து முன்பே வலியுறுத்தியிருந்தார் (மத். 5:29, 30; 18:8, 9). எல்லாவற்றையும் விற்றுத் தரித்திரருக்குக் கொடுத்தல் என்பது உலகளாவிய கட்டளையாக இருப்பதில்லை, ஆனால் ‘‘நிலையற்ற ஐசுவரியத்தின்மேல்’’ தங்கள் நம்பிக்கையை வைத்துள்ள யாவருக்கும் இது நடைமுறைப்படுவதாக உள்ளது (1 தீமோ. 6:17).

(2) இயேசு இந்த மனிதனை அன்புகூர்ந்து இவருக்குள் சாத்தியக்கூறைக் கண்டார் என்று நாம் குறிப்பிட்டுள்ளோம். இந்த இளம் அதிகாரி, தனக்குள்ள எல்லாவற்றையும் விற்றுவிட்டு, அவரை(இயேசுவை)ப் பின்பற்ற வேண்டும் என்ற கர்த்தரின் அறிவுறுத்துதல்களானது முழு நேர

*சீஷத்துவத்திற்கான - எல்லாவற்றையும் விட்டுவிடுதலைக் கேட்டதான - ஒரு அழைப்பாக இருந்தது. (இந்த வரலாற்றின் தொடர் நிகழ்ச்சியை மத். 19:27ல் காணவும்.)[34]*

*கிறிஸ்துவின் அறைகூவலுக்கு இந்த இளைஞர் எவ்வாறு பதில்செயல் செய்தார்? லூக்கா "அவன் ... இதைக் கேட்ட பொழுது, மிகுந்த துக்க மடைந்தான்" என்று எழுதினார் (லூக். 18:23).* ASV *வேதாகமத்தின்படி, "அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டான்" (மாற். 10:22) என்பதாக உள்ளது. இவர் நித்திய ஜீவனை விரும்பினார், ஆனால் அவ்வளவு விலைகொடுத்து அதைப் பெற விரும்பாதிருந்தார்.*

***எல்லா செல்வந்தர்களுக்கும் ஒரு அறைகூவல் (மத். 19:23-26; மாற். 10:23-27; லூக். 18:24-27)***

*இந்த மனிதர் புறப்பட்டுச் சென்றதைக் கவனிக்கையில் (லூக். 18:24), இயேசுவின் இதயம் பாரமாகி இருக்க வேண்டும். அவர் தமது சீஷர்களி டத்தில், "ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது" என்றார் (மாற். 10:23). கருத்தை ஆழமாய்ச் செலுத்துவதற்காக, அவர் "ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதலே நுழைவது எளிதாயிருக்கும்" என்றும் கூடுதலாகக் கூறினார் (மாற். 10:25). மதரீதியான கதைகளை எழுதுபவர்களால் பிரசித்தப்படுத்தப்பட்டுள்ள "ஊசிக்காது வாசல்" பற்றிய கருத்தை மறந்து விடுங்கள்.[35] கிறிஸ்து, "மனிதரால் கூடாத" விஷயத்தைப் பற்றிப் பேசினார் (லூக். 18:27): நேரடியான அர்த்தத்தில் பொதி சுமத்தப்பட்ட ஒரு மிருகத்தை நேரடியான அர்த்தத்தில் ஒரு தையல் ஊசியின் சிறிய துளையினுள் பலவந்தமாக உட்புகுத்துவதைப் பற்றியே அவர் கூறினார்.*

*இயேசுவின் சீஷர்கள், "மிகவும் ஆச்சரியப்பட்டு: 'அப்படியானால், யார் இரட்சிக்கப்படக்கூடும்?' என்றார்கள்" (மத். 19:25). செல்வம் என்பதை யூதர்கள் தேவனுடைய அங்கீகாரம் என்பதாக எடுத்துக் கொண்டனர். அவர்களின் சிந்தைகளில், செல்வந்தரான ஒரு மனிதர் இரட்சிக்கப்பட முடியாது என்றால், எவரொருவரும் இரட்சிக்கப்பட முடியாது என்ற கருத்துத்தான் இருந்தது. கிறிஸ்து, "மனுஷரால் இது கூடாததுதான்; தேவனாலே எல்லாம் கூடும்" என்று பதில் அளித்தார் (மத். 19:26; யோபு 42:2ஐக் காணவும்). தேவனால் ஒரு ஒட்டகத்தை, ஊசியின் காதினுள் திணித்துவிட முடியும். அவரால் ஒரு செல்வந்தனுடைய இருதயத்தை - அந்தச் செல்வந்தன் தன்னையே தாழ்த்தி தேவனுடைய வசனத்தை ஏற்றுக்கொண்டால், அவனது இருதயத்தை - மாற்றவும் முடியும் (1 தீமோ. 6:9, 10, 17-19ஐக் காணவும்).*

# வெகுமானங்களைப் பற்றிய விஷயம் என்ன?
# *(மத். 19:27-20:16; மாற். 10:28-31; லூக். 18:28-30)*

**மேம்பட்டிராத வெகுமானங்கள் (*மத். 19:27-29; மாற். 10:28-30; லூக். 18:28-30*)**

இந்த இளம் அதிகாரி தனது செல்வங்களை விட்டுவிட்டு, இயேசுவைப் பின்பற்றிவர வேண்டும் என்று இயேசு அறைகூவல் விடுத்திருந்தார், ஆனால் இந்த மனிதர் அந்த அழைப்பைப் புறக்கணித்திருந்தார். இதற்கு நேர்மாறாக, கிறிஸ்துவின் சீஷர்கள் இப்படிப்பட்ட அழைப்பு ஒன்றுக்கு நேர்மறையாகப் பதில்செயல் செய்திருந்தனர் (மத். 4:18-22; லூக். 5:11, 27, 28). ஆகையால் பேதுரு, கர்த்தரிடம், "இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே; எங்களுக்கு என்ன கிடைக்கும்?" என்று கேட்டார் (மத். 19:27).

ஆவிக்குரிய பலன்களின் கருத்தைச் சிலர், "தேவனுக்குக் கீழ்ப்படிதலுக்கான தரம் தாழ்ந்த நோக்கம்'' என்று இகழ்ந்துரைக்கின்றனர். வெகுமானங்களைப் பெற்றுக்கொள்ளுதல் என்பது கர்த்தரைப் பின்பற்றுவதற்கான நமது அடிப்படை நோக்கமாக இருக்கக் கூடாது (1 கொரி. 13:1-3ஐக் காணவும்) ஆனால், வேதாகமமானது வெகுமானங்களைப் பற்றி அதிகமாகக் கூறுகிறது (மத். 5:12; 6:4, 5; 10:41, 42; 1 கொரி. 3:8; 2 யோவா. 8). முதலில் கிறிஸ்து, அப்போஸ்தலர்களுக்குத் திட்டவட்டமான வெகுமானங்களைக் குறிப்பிட்டார்: ''மறுஜென்ம காலத்திலே மனுஷ குமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத். 19:28).

"மறுஜென்மம்" என்பது மேசியாவின் ஆளுகையைக் குறிப்பிடுவதற்காக யூதர்களால் பயன்படுத்தப்பட்ட சொற்றொடராக இருந்தது. NIV வேதாகமத்தில் இந்தச் சொற்றொடர், "எல்லாம் புதிதாக்கப்படுதல்"[36] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது கிறிஸ்து இந்த பூமியில் ஆயிரம் ஆண்டுகள் அரசாளுவார் என்று கற்பனை செய்யப்பட்டுள்ள எதிர்காலத்தைக் குறிப்பிடுவதில்லை. மாறாக, இந்தச் சொற்றொடர், கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குப் பின்பு வரவிருந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று, மேசியாவின் ராஜ்யமாகிய சபை நிலைநாட்டப்படுதலைக் குறிக்கிறது (அப். 2).[37] "மறுஜென்மம்/புதுப்பித்தல்" என்பது, மனுஷகுமாரன் தமது அரியணையில் வீற்றிருக்கும் "போது" நடைபெறும் என்பதைக் கவனியுங்கள். இயேசு பரலோகத்தில் தமது பிதாவினிடத்தில் திரும்பிச் சென்றபோது, ராஜாவாக முடிசூட்டப்பட்டார் (அப். 2:33-35). இப்போது அவர் தமது இராஜ்யமாகிய (கொலோ. 1:13) சபையின்மீது (மத். 16:18, 19) ஆளுகை செய்து கொண்டிருக்கின்றார் (1 கொரி. 15:24-28).

*கிறிஸ்து, தமது அப்போஸ்தலர்கள் "பன்னிரண்டு சிங்காசனங்களில் அமர்ந்து இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களை நியாயந்தீர்ப்பார் கள்" என்று அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்தார்.[38] அவர்கள் உயிருடன் இருக்கையில், தங்களின் பிரசங்கத்தின் மூலமாக இஸ்ரவேல் ஜனங்களை நியாயந்தீர்த்தார்கள்;[39] ஒரு நாளிலே அவர்கள் இயேசுவின் போதனை யென்ற ஏவுதல் பெற்ற பதிவேட்டின்படி இஸ்ரவேல் ஜனங்களை (மற்றுமுள்ள எல்லாரையும்) "நியாயந்தீர்ப்பார்கள்" (யோவா. 12:48ஐக் காண்க).*

*பின்பு இயேசு, தம்மைப் பின்பற்றுகின்ற ஒவ்வொருவருக்குமான பொதுவான பலன்களைப் பட்டியலிட்டார்: "என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனை யாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்" (மத். 19:29). ஊக்க மூட்டும் இந்த வாக்குத்தத்தத்தின்மீது ஒரு சில குறிப்புகளைக் கூறுவது முறையாகிறது.*

*(1) கிறிஸ்துவின் ஊழியம் வளமடைவதற்காக மேற்கொள்ளப்படும் தியாகங்களைப்பற்றி அவர் பேசினார். மத்தேயு சுவிசேஷத்தில், "என் நாமத்தினிமித்தம்" என்றுள்ளது (மத். 19:29). மாற்கு சுவிசேஷத்தில், "என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும்" என்றுள்ளது (மாற். 10:29). லூக்கா சுவிசேஷத்தில், "தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம்" என்றுள்ளது (லூக். 18:29).*

*(2) இப்படிப்பட்ட தியாகங்களை மேற்கொள்ளுகின்றவர்கள் இந்த வாழ்வில் பலன் அளிக்கப்படுவார்கள். மாற்கு சுவிசேஷத்தின்படி, இப்படிப் பட்ட ஒருவர், "இம்மையிலே ... நூறத்தனையாக ... அடைவான்" என்றுள்ளது (மாற். 10:30). "நூறத்தனையாக" என்பது, தனது பிள்ளையிடம் ஒரு தாய், "அதைச் செய்யாதே என்று உனக்கு நூறு தடவை சொல்லி விட்டேன்!" என்று கூறுவதுபோன்ற துல்லியமற்ற கருத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இருந்தபோதிலும், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்ததின் நிமித்தம் தங்கள் உடல்ரீதியான குடும்பங்களில் இருந்து பிரிக்கப்பட்டவர்கள், இந்தக் கூற்று உண்மையானது என்று சாட்சிபகர முடியும். தேவனுடைய குடும்பத் தில் (சபையில்; 1 தீமோ. 3:15), இவர்கள் நூற்றுக்கணக்கான சகோதரர் களையும் சகோதரிகளையும் - மற்றும் அவர்கள்மேல் அக்கறை கொள்வதற் குத் "தாய்மார்களையும்" கூடக் - கொண்டுள்ளனர்.[40]*

*(3) இருப்பினும் இயேசு, தம்மை எவரொருவரும் தவறான பாவனை களின் கீழ் பின்பற்றுவதை விரும்பாதிருந்தார். இவ்விதமாக நாம், இந்த வாக்குத்தத்தத்தில் பின்வரும் தெளிவான வார்த்தைகள் பொதிந்திருப் பதைக் காண்கின்றோம்: "துன்பங்களோடே கூட" (மாற். 10:30; மத். 5:10-12; அப். 14:22; 2 தீமோ. 3:12 ஆகியவற்றைக் காணவும்). இந்த வாழ்வில் எப்போதுமே இனிப்புடன் கசப்பும் உள்ளது.*

*(4) மாபெரும் வெகுமானம் பரலோகத்தில் இருக்கும்: "... மறுமையில் நித்திய ஜீவனையும்" (லூக். 18:30). எனது நண்பர் ஒருவர்,*

*கிறிஸ்தவராயிருப்பதில் உள்ள ஆசீர்வாதங்களைப் பற்றி ஒரு பிரசங்கத்தை எழுதியுள்ளார். அவர் தமது எடுத்துரைப்பை "இவையெல்லாமும், மற்றும் பரலோகமும் கூட!" என்று அழைக்கின்றார்.*

***ஈட்டப்படாத வெகுமானங்கள் (மத். 19:30-20:16; மாற். 10:31)***

*கிறிஸ்து, வெகுமானங்களைப் பற்றிய தமது போதனையை இன்னும் முடிக்காதிருந்தார். (நம்மைப் போலவே,) அந்நாட்களில் இருந்த அவரது சீஷர்களும் இன்னும் ஒரு கொள்கையைப் புரிந்துகொள்ள வேண்டியிருந்தது. அப்போஸ்தலர்களின் தியாகங்கள் மற்றும் கர்த்தருடன் அவர்கள் கொண்டிருந்த விசேஷித்த உறவுமுறை ஆகியவற்றின் காரணமாக அவர்கள், பலன்கள் கையளிக்கப்படும் வேளையில் தாங்கள், தாமாகவே "முதலாவதாக" இருப்பார்கள் என்று யூகித்துக் கொண்டிருக்கலாம். இயேசு இதற்கு முன்பே தாம் எடுத்துரைத்திருந்த ஒரு கொள்கையை அவர்களுக்கு நினைவூட்டினார் (லூக். 13:30ஐக் காணவும்): "ஆகிலும், முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள்" (மத். 19:30). பின்பு அவர், தமது சிந்தனையை மறுவலியூட்டுவதற்காக, நெய்ல் லைட்ஃபூட் அவர்கள் "உவமைகளிலேயே மிகவும் புதிரானது"[41] என்று அழைக்கின்ற விஷயத்தை எடுத்துரைத்தார் (மத். 20:16ஐக் கவனிக்கவும்).*

*மத்தேயு 20:1-16ல் இயேசு, "வீட்டெஜமானாகிய ஒரு மனுஷன் ... தன் திராட்சத் தோட்டத்துக்கு வேலையாட்களை அமர்த்த அதிகாலையிலே [அநேகமாக காலை 6.00 மணிக்கு] புறப்பட்டது" பற்றிய ஒரு கதையைக் கூறினார் (மத். 20:1). ஆகஸ்ட் மாதக் கடைசி அல்லது செப்டம்பர் மாதத்தின் முன் பகுதி என்பது திராட்சப் பழங்களின் அறுவடைக் காலமாக இருந்தது. திராட்சப் பழங்கள் பழுத்தவுடன் அவைகளைப் பறித்தெடுப்பது உடனடியாக நடைபெற வேண்டிய வேலையாக இருந்தது. இந்த நில உரிமையாளர் அநேகமாக, வேலையை எதிர்பார்த்து மக்கள் கூடியிருந்த கடைத் தெருவில் ஒரு இடத்திற்குச் சென்றிருப்பார் (வ. 3ஐக் காணவும்).[42] இவர் அங்கு, தாம் கண்டவர்களை வேலைக்கு அமர்த்தி, அவர்களுக்கு, "நாளொன்றுக்கு ஒரு பணம் [தினேரியம்]" தருவதாக ஒப்புக்கொண்டார் (வ. 2).[43]*

*இவருக்கு இன்னும் அதிகமான வேலையாட்கள் தேவைப்பட்டனர், எனவே இவர் "மூன்றாம் மணி வேளையில்" (சுமார் 9.00 மணியளவில்) மீண்டும் சென்று (வ. 3) ஆய்வுசெய்தார், பின்பு "ஆறாம், ஒன்பதாம் மணிவேளையிலும்" (நண்பகல் மற்றும் சுமார் 3.00 மணியளவில்) அவ்வாறே ஆய்வுசெய்தார் (வ. 5). ஒவ்வொரு வேளையிலும் இவர் அதிகமான வேலையாட்களை வேலைக்கு அமர்த்தி, அவர்களுக்கு "நியாயமானபடி உங்களுக்குக் கூலிகொடுப்பேன்" என்று வாக்களித்தார் (வ. 4). கடைசி முறையாக இவர் "பதினோராம் மணி வேளையிலும்" (சுமார் மாலை 5.00 மணியளவில்) சென்று ஆய்வு செய்து, "சும்மா நிற்கிற வேறு சிலரைக்" கண்டார் (வ. 6). இவர், "ஏன் [இப்படி நிற்கிறீர்கள்]?" என்று கேட்டபோது அவர்கள், "ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை" என்று பதில்*

கூறினார்கள்.[44] அவர்களிடத்தில் இவர், "நீங்களும் திராட்சத் தோட்டத்துக்குப் போங்கள்" என்று கூறினார் (வ. 7).

"சாயங்காலத்தில்" (சுமார் 6.00 மணியளவில்), உரிமையாளர் தமது காரியக்காரரை நோக்கி, வேலையாட்களுக்குக் கூலி கொடுக்கும்படி கூறினார் (வ. 8). மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, கூலியாட்கள் ஒவ்வொரு நாளின் முடிவிலும் கூலிகொடுக்கப்பட்டனர் (லேவி. 19:13; உபா. 24:15).

நாள் முழுவதும் வேலை செய்தவர்கள் திகைப்படையும்படி, ஒரு மணி அல்லது அதற்குச் சமமான நேரம் மாத்திரம் வேலை செய்தவர்கள் அவர்களுக்குச் சமமான கூலியைப் பெற்றார்கள் (மத். 20:9, 10). இதைப் பற்றி அவர்கள் முணுமுணுத்தபோது (வ. 11, 12), நில உரிமையாளர், தாம் அவர்களுக்கு வாக்களித்தபடியே அவர்களுக்கு மிகச் சரியாகக் கூலி கொடுக்கப்பட்டிருந்ததை அவர்களுக்கு நினைவூட்டினார் மற்றும், தாம் எதை விரும்புகின்றாரோ அதை மற்றவர்களுக்குக் கொடுக்கத் தாம் உரிமையுடையவராக இருந்ததாகவும் கூறினார் (வ. 13-15[45]).

இந்த உவமையானது, மக்கள் கிறிஸ்தவராவதற்குப் "பதினோராம் மணிவேளை" வரையிலும் காத்திருப்பதை உற்சாகப்படுத்துவதற்காகக் கூறப்படவில்லை. பதினோராம் மணிவேளையில் வந்த வேலையாட்கள், தாங்கள் அழைக்கப்பட்ட உடனே வேலை செய்யத்தொடங்கி விட்டார்கள். இந்த மக்கள், தங்களுடைய முதிர்வயதில் ராஜ்யத்திற்குள் வருவதற்குத் திட்டமிட்டு, ஆண்டுகளுக்குப்பின் ஆண்டாகச் சுவிசேஷத்தைப் புறக்கணித்துக் கொண்டிருப்பவர்களைப் போன்றவர்களாக இருப்பதில்லை. காத்திருத்தல் என்பது எப்போதுமே அபாயகரமானதாக உள்ளது. முதலில், பதினோராம் மணிவேளைக்காகக் காத்திருப்பவர்கள் அவ்வளவு நீண்ட காலம் உயிர் வாழ்ந்திராமல் போகலாம். பதினோராம் மணிவேளையில் கிறிஸ்தவர்களாகலாம் என்று எதிர்பார்த்திருப்பவர்களில் சிலர் பத்தரை மணிவேளையிலேயே இறக்கின்றார்கள் என்று கூறப்படுகிறது. இரண்டாவது, இவர்கள் நீண்ட காலம் உயிர் வாழ்ந்திருந்தாலும், [தங்கள் பழைய நம்பிக்கைகளை விட்டு] சுவிசேஷத்தைப் பற்றிக்கொள்ளக் கூடாதபடிக்கு இவர்கள் மிகவும் கடினப்பட்டுப் போகலாம் (எபி. 3:13; 6:6ஐக் காணவும்). ஒரு மனிதன் சுவிசேஷத்தினால் அழைக்கப்பட்டவுடன் (2 தெச. 2:14) விரைவிலேயே அவர் உடனடியாகக் கீழ்ப்படிவது அவசியமாக உள்ளது.

இதற்கு மறுபுறத்தில், "இவ்வளவு வேலைக்கு இவ்வளவு கூலி" என்ற அடிப்படையில் வெகுமானங்கள் தரப்படாது என்பதை அப்போஸ்தலர்களுக்கும், முதலாம் மணிவேளையில் வந்த ஊழியக்காரர்களுக்கும் நினைவூட்டுவதற்காக இந்த உவமை கூறப்பட்டது. வெகுமானங்கள் என்பவை ஈட்டப்படுபவை அல்ல, ஆனால் இராஜரீகமான தேவனுடைய இரக்கத்தின் அடிப்படையில் பொழியப்படுபவைகளாக உள்ளன.

மனிதர்களால், ராஜ்யத்தில் "முதன்மையானவர்கள்" என்று எண்ணப்படுபவர்கள், தேவனுடைய பார்வையில் உண்மையாகவே "கடைசியான

*வர்களாக” இருக்கலாம், விசேஷமாக இவர்கள் - இந்த உவமையில் வரும் முதலாம் மணிவேளையில் வந்த வேலைக்காரர்கள் நினைத்ததுபோல் - தங்களுக்கு அதிகம் கொடுக்கப்படத் தாங்கள் தகுதி வாய்ந்தவர்கள் என்று நினைத்தால், அப்படியிருக்கின்றனர். எதிர்மாறான வகையில், ராஜ்யத்தில் சார்புநிலையில் முக்கியமற்றவர்கள் (‘‘கடைசியானவர்கள்’’) என்று நினைக்கப்பட்டவர்கள் தேவனுடைய மதிப்பீட்டில் “முதலானவர்களாக” இருக்கலாம் (மத். 20:16).*

---

குறிப்புகள்

[1]*“பலஸ்தீனத்தின் எல்லாப் பகுதிகளிலும் இயேசுவின் முடிவு ஊழியத்தின்” பெரும்பாலான பகுதிகளை மத்தேயு மற்றும் மாற்கு ஆகிய இரு சுவிசேஷங்களுமே தாவிக் கடந்து சென்றன. இவ்விரு சுவிசேஷகர்களின் விவரங்களும் கலிலேயாவில் இருந்து பெரேயாவுக்கு (“யோர்தானுக்கு அப்பால் உள்ள பகுதிக்கு”) செல்லுகின்றன (மத். 19:1; மாற். 10:1). இவர்கள் அங்கு அவரது ஊழியம் பற்றிச் சுருக்கமான விவரங்களைக் கொடுத்தனர் (மத். 19:2; மாற். 10:1; “கிறிஸ்துவின் வாழ்வு, 4” என்ற புத்தகத்தில் காணவும்). பின்பு இவர்கள், கிறிஸ்து எருசலேமுக்குக் கடைசிப் பயணம் தொடங்கிய இடத்தில் மீண்டும் தொடர்ந்தனர்.* [2]*“தேவை: எண்ணப்போக்கை ஒழுங்குபடுத்துதல்” என்ற பாடத்தை மறுகண்ணோட்டமிடவும்.* [3]An example of a bill of divorcement is given in W. W. Davies, “Divorce,” *International Bible Standard Encyclopedia*, gen. ed. James Orr (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1939), 2:864. [4]*சாத்தியமான இன்னொரு அபாயத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்: இயேசு, ஏரோதின் ஆளுகைப் பகுதியின் பாகமாக இருந்த பெரேயாவில் இருந்தார். யோவான் ஸ்நானன் தமது போதனையின் மூலம் ஏரோதின் வைப்பாட்டியை மகிழ்ச்சியற்றுப் போகச் செய்திருந்தார் - மற்றும் அவர் தமது தலையை இழந்தார்.* [5]*மாற்குவின் செய்தியமைப்பு முறையானது மத்தேயுவின் செய்தியமைப்பு முறையிலிருந்து சற்றே மாறுபட்டுள்ளது. இது, இன்றியமையாதவைகளில் கருத்தொருமைப்பட்டு, விவரங்களில் சற்றே மாறுபடுகின்ற சுயாதீனமான சாட்சிகளுக்கே உரிய இயல்பு நிலைக்கு மாதிரியாக உள்ளது. வழக்கம்போலவே, இவ்விரு சுவிசேஷ விவரங்களும் ஒன்றுக்கொன்று முரண்படுதலுக்குப் பதிலாக ஒன்றையொன்று நிறைவு செய்வதாக உள்ளது. பாடத்தின் இப்பகுதிக்கு மத்தேயு சுவிசேஷ விவரமே ஆதாரமூலமாக உள்ளது.* [6]*ஆதியாகமம் 1:27.* [7]*ஆதியாகமம் 2:24.* [8]*மத்தேயு 19:4-6 பற்றிய ஒரு சுருக்கமான கலந்துரையாடலுக்கு, “ஆகவே நீங்கள் திருமணம் செய்து கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றீர்களா?” என்ற பிரசங்கக் குறிப்புகளை பிற்பாடு இந்தப் புத்தகத்தில் காணவும்.* [9]*இந்த எடுத்துரைப்பில் உபாகமம் 24:1-4ஐக் கலந்துரையாடுவதற்கு இடம் மிகவும் குறைவாக உள்ளது. அந்த வசனப்பகுதியில் உள்ள ஒழுங்கு முறைமைகள் திருமண முறிவை ஊக்கப்படுத்துவதற்கல்ல, ஆனால் அதை முறைப்படுத்தவே ஏற்படுத்தப்பட்டன என்பதை மனதில் வையுங்கள். மேலும், அவ்வசனப்பகுதி யானது பழைய ஏற்பாட்டில் உள்ளது மற்றும் அது, இயேசு மரித்தபோது எடுத்துப் போடப்பட்ட உடன்படிக்கையின் பாகமாக இருந்தது என்பதையும் மனதில் வையுங்கள்.* [10]*திருமண முறிவைத் தேவன் அனுமதிக்கும்படிக்கு இஸ்ரவேல் ஜனங்களின் இருதயக் கடினம் தூண்டிவிட்டது ஏன் என்பது பற்றிக் கற்றறிந்த யூகங்களை விளக்கவுரையாளர்கள் ஏற்படுத்தியுள்ளனர். இவற்றில் ஒரு யூகமானது*

இயேசுவின் போதனைக்கு அவரது சீஷர்களின் பதில்செயலானது தொடர்புடையதாக உள்ளது: "விவாகம் பண்ணுகிறது நல்லதல்ல" (மத். 19:10). ஆவிக்குரிய வகையில் பக்குவமற்றிருந்த இஸ்ரவேல் ஜனங்கள், திருமணத்திற்கு வாழ்நாள் முழுவதும் உறுதிப்பாட்டுடன் இருப்பதற்கு மாறாக வேசித்தனத்தில் வாழ்வதைத் தேர்ந்து கொள்வார்கள் என்று தேவன் அறிந்திருக்கலாம்.

[11]மத்தேயு 19:8 யூதர்களைக் குறிப்பிடுகையில், அப். 17:30 புறஜாதியாரைக் குறிப்பிடுகிறது; ஆனால், கொள்கையென்பது ஒரே மாதிரியானதாகவே உள்ளது. [12]மத்தேயு 19:3-9ன் மீதான கூடுதல் கலந்துரையாடலுக்கு, "ஆகவே நீங்கள் திருமணம் செய்து கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றீர்களா?" என்ற இனிவரும் துணைப் பாடத்தைக் காணவும். [13]அவர்கள் "வீட்டில் இருந்தார்கள்" என்று மாற்கு 10:10 குறிப்பிடுகிறது. அவர்கள் பயணம் பண்ணுகையில், இரவுவேளையைச் செலவிடுவதற்காகச் சில நேரங்களில் இல்லங்களுக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள் என்பது உறுதி. [14]See William Barclay, *The Gospel of Matthew,* vol. 2, rev. ed.,The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 197. [15]மாற்குவின் சுவிசேஷமானது புறஜாதியாரை (ரோமர்களை) மனதில் கொண்டு எழுதப்பட்ட காரணத்தினால், தங்கள் கணவர்களைத் தள்ளிவிடும் பெண்களைப் பற்றிய போதனையை உள்ளடக்கியதாக இருக்கலாம். "கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில், "மாற்கு சுவிசேஷம்: ஊழியராகிய கிறிஸ்து" என்ற பாடத்தில் காணவும். [16]அடிக்குறிப்பு எண் 10ஐ மறுகண்ணோட்டமிடவும். [17]இந்தப் பழக்கமானது அந்த நாட்களில் புறதெய்வ வழிபாட்டாளர்களிடத்தில் பொதுவானதாக இருந்தது என்பது கவலைக்குரியதாகும். [18]இது, திருமணமாகாத நிலையானது திருமணமான நிலையைவிட அதிகம் பரிசுத்தமானதாக உள்ளது என்று அர்த்தப்படுத்துவதில்லை. எபிரெயர் 13:4 வசனம், "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளது" என்று கூறுகிறது. பவுலுடைய கூற்றின்படி, மனிதர்கள் "விவாகம் பண்ணாதிருக்கும்படி" போதித்தல் என்பது விசுவாச விலக்கத்தின் ஒரு பண்பாக இருக்கும் (1 தீமோ. 4:3). [19]"பிள்ளைகளைப் பற்றிய குறுகிய உரையானது, ஒப்பீட்டு சுவிசேஷ விவரங்கள் மூன்றும் நெருங்கிய வகையில் இணைவாயுள்ளதாயும் கிறிஸ்துவின் பூமிக்குரிய பணியின் முடிவுவரை அவ்வாறே நிலைத்துள்ளதாயும் குறிக்கின்ற இடமாக உள்ளது" (Robert Duncan Culver, *The Life of Christ* [Grand Rapids, Mich.: Baker Book House, 1976], 196-197). [20]இயேசு ஒரு குழந்தையாக இருந்தபோது அவரை, சிமியோன் தமது கைகளில் ஏந்திக்கொண்டு ஜெபித்தார் (லூக். 2:28-32).

[21]முன்பு இயேசு ஒரு பிள்ளையைத் தன் கைகளில் எடுத்து வைத்திருந்தார் (மாற். 9:36). [22]யாருக்காக ஜெபித்தார்களோ, அவர்கள்மீது "கைகளை வைத்தல்" சாதாரண மானதாகவே இருந்தது - இது ஜெபத்தின் தனிப்பட்ட உணர்வுநிலையுடன் மனிதத்தொடுதலையும் நெருக்கத்தையும் கூட்டுவதாக இருந்தது. வியாதிப்பட்ட ஒரு நபருக்காக நான் ஜெபிக்கும்போது, பொதுவாக நான் அவரது/அவளது கையைப் பிடித்துக் கொண்டு ஜெபிப்பதுண்டு. [23]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 180. [24]Culver, 196. [25]இது இம்மனிதர் ஒரு ஜெப ஆலயத்தில், "அதிகாரியாக" இருந்தார் என்று அர்த்தப்படுகிறதா? (மாற். 5:36) அல்லது இது, இவர் சனதெரீன் சங்கத்தில் உறுப்பினராயிருந்தார் என்று அர்த்தப்பட்டிருக்க முடியுமா? (ஒரு "அதிகாரி" என்னப்பட்ட நிக்கொதேமு சனதெரீன் சங்கத்தில் உறுப்பினராக இருந்தார் [யோவா. 3:1; 7:45, 50].) இதை நாம் அறிவது இல்லை. [26]மத்தேயு சுவிசேஷ விவரத்தில், இந்த இளைஞரின் கேள்வியானது, இவர் செய்ய வேண்டிய "நன்மை" எது என்பதைப் பற்றியதாக இருந்தது (மத். 19:16). கேள்விகேட்டவர் அநேகமாக, "நன்மை" என்ற வார்த்தையை

இருமுறை பயன்படுத்தியிருப்பார்: கர்த்தரை அழைப்பதற்கும் மற்றும் தாம் என்ன செய்யவேண்டும் என்பதற்கும். [27]நாம் இயேசுவின் மரணத்திற்குப் பின்பு வாழ்ந்துகொண்டிருப்பதால், இந்தக் கேள்விக்கு இன்றைய நாட்களில் மாறுபட்ட பதில் ஒன்று தரப்படுவதாயிருக்கும். இருந்தபோதிலும், அடிப்படைக் கொள்கையானது இன்னமும் உண்மையானதாக உள்ளது: பதிலானது தேவனுடைய வசனத்தில் கண்டறியப்பட வேண்டியதாக உள்ளது. [28]மாற்கு சுவிசேஷ விவரமானது, "வஞ்சனை செய்யாதிருப்பாயாக" என்பதைக் கூடுதலாகக் கூறுகிறது (மாற். 10:19). மத்தேயு சுவிசேஷ விவரமானது, லேவி. 19:18ஆ-விலிருந்து "உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்பதைக் கூடுதலாகக் கூறுகிறது. இந்தக் கூற்றானது பத்து கட்டளைகளில் கடைசி ஆறு கட்டளைகளின் தொகுப்புரையாகக் காணப்பட்டது. [29]மத்தேயு சுவிசேஷ விவரத்தில், "நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால் ..." என்றுள்ளது (மத். 29:21). KJVயில் "perfect" என்றுள்ளது. "முழுமை" அல்லது "பூரண" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது மனிதர்களுக்கு நடைமுறைப் படுத்தப்படும்போது, ஆவிக்குரிய முழுமை அல்லது பக்குவத்தைக் குறிப்பிடுகிறது. [30]மத்தேயு 6:19-21ஐக் காணவும்.

[31]"என்னைப் பின்பற்றி வா" என்பது இயேசுவின் வேண்டுகோள்கள் யாவற்றின் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது (மத். 16:24). [32]சபை நிலைநாட்டப்பட்ட பின்பு, சில காலத்திற்குக் கிறிஸ்தவர்கள், மற்ற கிறிஸ்தவர்களுக்கு உதவுவதற்காகத் தங்கள் உடைமைகளை விற்றனர் (அப். 2:44, 45; 4:32-37); ஆனால் இது கேட்டுக் கொள்ளப்பட்டதாக இராமல், தன்னார்வத் துடன் செய்யப்பட்டதாக இருந்தது (அப். 5:3, 4). [33]பொருளாசை பற்றிய பழைய ஏற்பாட்டுக் கட்டளையானது, பிறருக்குச் சொந்தமானவற்றின்மீதான ஆரோக்கியமற்ற ஒரு விருப்பத்தை வலியுறுத்திற்று. ஆயினும் இயேசு, இந்தக் கருத்தை, சொந்த உடைமைகளின்மீதான ஆரோக்கியமற்ற அக்கறையை உள்ளடக்கும்படி விரிவாக்கினார். (லூக். 12:13-15ஐக் காணவும்; வசனம் 15ல் "பொருளாசை" [greed] என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையானது "பேராசை" [covetousness] என்று அடிக்கடி மொழிபெயர்க்கப்படுகிறது.) [34]இயேசு தமது ஊழியத்தின் முடிவு வரையிலும்கூட, முழுநேர சீஷத்துவத்திற்கென்று மனிதர்களை நியமித்துக் கொண்டிருந்தார் (லூக். 14:33ஐக் காணவும்). [35]சுமைசுமக்கும் மிருகங்களுக்கென்று பெரிய வாசல் ஒன்றும், கால்நடையாய் நடந்துவரும் பயணிகளுக்கென்று சிறிய வாசல் ஒன்றுமாக இரண்டு வாசல்கள் நகரத்திற்கு இருந்தன என்று இயேசு குறிப்பிட்டதாக ஒரு விளக்கத்தை லார்டு ஜார்ஜ் நக்னெட் (1845-6) என்பவர் அறிமுகப்படுத்தினார் (J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* [Cincinnati: Standard Publishing Co., 1914], 547). (உண்மையில் அடிப்படை எதுவுமற்ற) இந்த "விளக்கம்," மதரீதியான கதைகளை எழுதுபவர்களால், சிறப்பாக வேதாகம உபதேசத்தை மென்மையாக்குவதற்குச் சாய்கின்ற எழுத்தாளர்களால் தெரிவு செய்யப்பட்டது. [36]தீத்து 3:5ல் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்றொடரானது எல்லாம் புதிதாகின்றபோது, கிறிஸ்தவராவதைக் குறிக்கிறது (2 கொரி. 5:17). [37]இது தொடர்பான ஒரு காட்சியமைவில் லூக்கா சுவிசேஷத்தில் "எனது ராஜ்யம்" (லூக். 22:30) என்றுள்ளது, மத்தேயு சுவிசேஷத்தில் "மறு ஜென்ம காலத்திலே" என்றுள்ளது (மத். 19:28). [38]ஏதோ சில கருத்தில், எல்லாக் கிறிஸ்தவர்களும் இங்கும் நித்தியத்திற்கும் கிறிஸ்துவுடன் "ஆளுகை" செய்கின்றனர் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது (வெளி. 5:10; 2 தீமோ. 2:12). கிறிஸ்தவர்கள் - அநேகமாக தேவபக்தியுள்ள வாழ்க்கையை நடத்துவதாலும் தேவனுடைய வசனத்தைப்

போதிப்பதினாலும் - "உலகத்தை நியாயந்தீர்க்கின்றார்கள்" என்றும் புதிய ஏற்பாடு போதிக்கிறது (1 கொரி. 6:2). [39]அதாவது, இஸ்ரவேலர்கள் (யூதர்கள்), இஸ்ரவேலர்களுக்கான தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றவில்லை என்று அப்போஸ்தலர்கள் காண்பித்தார்கள் (எடுத்துக்காட்டாக, ரோமர் 9:6, 7ஐக் கவனிக்கவும்). இவ்வசனப் பகுதியில் உள்ள "இஸ்ரவேலர்கள்" என்பது ஆவிக்குரிய இஸ்ரவேலர்களை(சபையை)க் குறிக்கிறது என்றும், இவ்வசனப்பகுதி சபையின்மீது அப்போஸ்தலர்கள் கொண்டுள்ள அதிகாரத்தைக் குறிக்கிறது என்றும் சிலர் நினைக்கின்றார்கள் - ஆனால் ''நியாயந்தீர்த்தல்'' என்பதற்கான எதிர்மறைச் சொற்பொருளே சந்தர்ப்பப் பொருளுக்குச் சிறப்பாகப் பொருந்துகிறது. [40]இவ்வசனப் பகுதியானது நாம் விட்டுக் கொடுக்கின்ற வீடுகள் மற்றும் நிலங்களைப் போல நூறத்தனையாகப் பெறுதலைப்பற்றியும் குறிப்பிடுகிறது. இது நேரடியாக எடுத்துக் கொள்ளப்படக்கூடாது என்றாலும், ஒரு கிறிஸ்தவர், கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள பிற உறுப்பினர்களை எங்கெல்லாம் காண்கின்றாரோ, அங்கெல்லாம் அவர் வரவேற்பை உணருகின்றார் என்பதும் உண்மையாகவே உள்ளது.

[41]Neil R. Lightfoot, *The Parables of Jesus,* Part 2 (Austin, Tex.: R. B. Sweet Co., 1965), 52. வேலைக்கு அமர்த்துகின்ற எந்த மனிதரும், இந்த உவமையில் உள்ள ஊதிய விகிதத்தைப் பயன்படுத்தும்படிக்கு எதிர்பார்க்க முடியாது என்பதால் இந்த உவமை ''புதிரானதாக'' உள்ளது - ஆனால் தேவன், மனித நடைமுறைகளினால் கட்டப்படுபவரல்ல (ஏசா. 55:8, 9). [42]இது அமெரிக்காவில் பொதுவான நடைமுறையாக இருந்தது, மற்றும் அமெரிக்காவின் சில பாகங்களிலும் உலகத்தின் பிறபாகங்களிலும் இன்னமும் நடைமுறையில் உள்ளது. [43]"தினேரியம்" என்பது வெள்ளியினால் செய்யப்பட்ட சிறிய ரோம நாணயமாக இருந்தது. இது சாதாரணத் தொழிலாளிக்கு ஒரு நாள் கூலியாக இருந்தது என்று நாம் உய்த்துணருகின்றோம். [44]ஒவ்வொரு முறையும் நில உரிமையாளர் கடைவீதியின் வெவ்வேறு இடங்களில் ஆய்வு செய்திருக்கலாம். [45]வசனம் 15 ''வன்கண்'' என்று குறிப்பிடுகிறது. மூலவசனத்தில் "பொல்லாத கண்" என்றுள்ளது (KJVயில் காணவும்), இது சுயநலம், பொருளாசை மற்றும் பொறாமை என்பவற்றிற்கான எபிரெயச் சொல்விளக்கமாக இருந்தது (நீதி. 28:22). [46]இந்தத் தலைப்புகளின்மீதான இயேசுவின் போதனைகளைத் தொகுத்துரைக்க நீங்கள் விரும்பலாம். [47]ஏற்புடையதென்றால், நீங்கள் உங்கள் வகுப்பின் மாணவர்களிடத்தில், வேதாகமம் தொடர்பான கேள்விகள் எதையும் அவர்கள் கொண்டிருக்கின்றார்களா என்று கேட்கச் சற்றே இடைவெளி கொடுக்க விரும்பலாம். [48]இந்த வாழ்வில் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் அளிக்கப்பட்டு விடாது. சில விஷயங்களை வெளிப்படுத்துவது பொருத்தமானதென்று தேவன் காணாதிருந்தார் (உபா. 29:29); ஆனால் நாம் இப்போது அறியவேண்டிய ஒவ்வொன்றும் வேதாகமத்தில் காணப்படுகிறது. ஒரு நாளிலே, நாம் கர்த்தருடைய பிரசன்னத்தில் நிற்கும்போது, எல்லா விஷயங்களும் தெளிவாகும்.